# "நிபந்தனையின்றி அரசுடன் பேச புலிகள் தயார்" - கிட்டு

(லண்டன்)

நிபந்தனை எதுவுமின்றி அரசுடன்பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. கிட்டு லண்டனிலிருந்து தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் நிபந்தனைகள் எதுவுமின்றி மீண்டும் பகிரங்கமாகப் பேசுவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஆனி 24 | இதழ்: 147

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 8-7-1991


## நிபந்தனையில் மாற்றமில்லை - பிரட்மன்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு அரசு விதித்த நிபந்தனைகளில் எந்தவிதமாற்றமும் இல்லை என்று ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவித்தாவது விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதற்குமுன் தீவிரவாதத்தை கைவிட்டதாக அறிவிக்க வேண்டும். இதே வேளையில் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும் என்று அவர் தெரிவித்தார். (மா)

## அகதிகள் அவதி

(மன்னார்)

மடுக்கோவில் அகதிகள் முகாமைச் சுற்றியுள்ள குளங்கள், கிணறுகள் யாவும் வரட்

(4-ம் பக்கம் பார்க்க)

# வவுனியா, மன்னார் பகுதிகளில் புலிகள்-படையினர் கடும் சமர்!

(கொழும்பு)

வவுனியா, மன்னார்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்குமிடையில் கடும் சமர் இடம்பெற்று வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சமரில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லையெனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

வவுனியா மன்னார் பகுதிகளில் நேற்றுமுன்தினம்முதல்விடுதலை புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றுவருகின்றன.

வவுனியாவிலுள்ள மாமடுவ என்னும் சிங்கள கிராமத்தில் படையினர் குவிக்கப்படுவதாகவும், மன்னாருக்கு மேலதிக படைகள் அனுப்பப்படுவதாகவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (மா)

## காரைநகர் - ஆனையிறவில் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர், ஆனையிறவுப் பகுதிகளிலுள்ள இராணுவத்தினர் நேற்றுக்காலை கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

காரைநகர் இராணுவத்தினர் நேற்றுக் காலை ஆறு மணியிலிருந்து ஏழு மணி வரை பொன்னாலைப்பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை நிகழ்த்தினர்.

[4ம் பக்கம் பார்க்க]

## தவில் மேதை சின்னராசா காலமானார்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் தவில் மேதை இணுவையூர் என். ஆர். சின்னராசா நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 61.

[4ம் பக்கம் பார்க்க]

## இராணுவ ட்ரக் வெடித்து 22 படையினர் படுகாயம்

(வவுனியா)

மதவாச்சி வவுனியா எல்லைப் பகுதியிலுள்ள உலுக்குளம் பூனாவை வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினர் பிரயாணம் செய்த வாகனமொன்றில் வெடிமருந்து வெடித்ததால் 22 படைவீரர்கள் படுகாயமடைந்தனர்.

இவர்கள் பிரயாணம்செய்த வாகனம் சுக்குநூறாகியது. நால்வரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. படையினர் பயிற்சியை முடித்துக்கொண்டு திரும்புகையிலேயே இவ்விபத்து நடைபெற்றது. (எஸ்)

## வீர வணக்கம்

[யாழ்ப்பாணம்]

தவறுதலாக நேற்று ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி பரணி என்பவர் வீரமரணமடைந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளியவளை 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகரட்ணம் பரமராஜா என அழைக்கப்படும்வீரவேங்கை பரணிக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். [க]

## மன்னார் தீவில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் தீவில் மினி முகாம்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் தொடக்கம் தலைமன்னார் வரைக்கும் மறுபுறத்தில் தாழ்வுப்பாடு வரையும் ஒரு மைல் தூர இடைவெளி

[4-ம் பக்கம் பார்க்க]

## கூட்டுப்படை தலைமை அலுவலகத்தில் வழங்கப்பட்ட அனுமதி அனுராதபுரத்திற்கு மாற்றம்

[அனுராதபுரம்]

வடபகுதிக்கு உணவுப் பொருள்களையும் உரவகைகளையும் எடுத்துச்செல்வதற்கான இராணுவ கூட்டுப்பணியகத்தின் அனுமதி இவ்வாரம் முதல் அனுராதபுரத்தில் வழங்கப்படும்.

எடுத்துச்செல்லப்படும் சகல பொருள்களும் இராணுவத்தின் மேற்பார்வையிலேயே லொறியில் ஏற்றப்படவேண்டுமென்ற நிபந்தனைகளும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக வடபகுதிக்கான உணவுப் பொருள்களை எடுத்துச்செல்ல இராணுவ கூட்டுப்படை பணியகம் அனுமதி மறுத்ததையடுத்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. [எஸ்]

## சர்வகட்சி மாநாடு கூட்டுமாறு கோரிக்கை

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டினைக் கூட்டி இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவை கொழும்பிலுள்ளதமிழ் குழுக்கள் கேட்கவுள்ளன.

கடந்த மாதம் 21ம் திகதி கொழும்பில் இடம்பெற்றுள்ள குண்டு வெடிப்பைத் தொடர்ந்து தேக்கநிலை அடைந்திருக்கும் இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சி மீண்டும் மேற்கொள்ளவேண்டுமென இக்குழுக்கள் கோரவுள்ளன.

சர்வகட்சி மாநாடு, இனப் பிரச்சனை தீர்வு தொடர்பாக அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத்துடனும் இக்குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

## கொழும்பு குண்டுவெடிப்பு புகலிடம் கொடுத்தோரை கைதுசெய்ய உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்புத் தொடர்பாக தேடப்பட்டுவந்த வரதனுக்கு கொட்டகலையில் புகலிடமளித்ததற்காக மலையகமக்கள் விடுதலைமுன்னணியின் தலைவர் திரு. சந்திரசேகரனையும், பொதுச்செயலாளர் காதரையும் உடனடியாகக் கைதுசெய்யுமாறு பாதுகாப்பு புலனாய்வுப் பகுதி உத்தரவிட்டுள்ளது (எஸ்)

## ஓய்வூதியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஓய்வூதியர்கள் எவரேனும் கொழும்பில் அல்லது இதர மாவட்டங்களில் இதுவரை தற்காலிகமாக ஓய்வூதியம் பெற்றிருப்பின், மீண்டும் தமது ஓய்வூதியம் சம்பந்தமாக யாழ்.செயலகத்திற்கு வரும்போது தற்காலிகமாக ஓய்வூதியம் பெற்ற அலுவலகத்திலிருந்து அவை சம்பந்தமான கடிதங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என யாழ். ஓய்வூதியப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## மாணவருக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் ஐம்பது கிழக்கு மாகாண மாணவர்களுக்கு காகிதாதிகள், படுக்கைவிரிப்புகள் போன்ற பொருட்கள் யாழ்.மாவட்ட அரச சார்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### நாடகநூல்

''இன்று தமிழில் வானொலி நாடகம்'' எழுதுபவர்களில் தலைசிறந்தவர் என்று விமர்சகர் K. S. சிவகுமாரனால் பாராட்டப்பட்ட அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 19 நாடகங்கள்: கெட்டிக்காரர்கள்: 35/-, முதலாம்பிள்ளை 30/-. (சி4894)


## ஷெல் தாக்குதலால் பாடசாலை இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

காரைநகரிலிருந்து ஏவப்படும் ஷெல்கள் பொன்னாலைப் பகுதியில் அடிக்கடி வந்து விழுந்து பெரும்சேதத்தை ஏற்படுத்திவருவதைத்தொடர்ந்து பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் கடந்த வாரம் தொடக்கம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (72)

## முதலாமிடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியில் (1991) சாவகச்சேரி கோட்டத்தைச் சேர்ந்த கைதடி நாவற்குழி ஸ்ரீ மகா விஷ்ணு அ. த. க. பாடசாலை மாணவர்களின் 'தர்மம் வெல்லும்' நாட்டுக்கூத்து முதலாம் இடத்தைப்பெற்றுக் கொண்டது.

## 11 மாதமாக சம்பளமில்லை

(கொழும்புத்துறை)

யாழ். சீ-நோர் தொழிற்சாலை ஊழியர்களுக்கு கடந்த 11 மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை.

இதுகுறித்து பல தடவை கொழும்புக் தலைமை அலுவலகத்துடனும், யாழ். அரசாங்க அதிபருடனும் நேரில் தொடர்புகொண்டும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை என ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளர். (154)

# முதலுதவி சேவை பற்றி சகலரும் அறிய வேண்டும்

(பண்டத்தரிப்பு)

'ஆபத்து நேரங்களில் உயிர் காக்கும் சேவையான முதலுதவிச் சேவைபற்றி இன்று ஒவ்வொருவரும் நன்கு அறிந்திருக்க வேண்டியது அவசியமானதாகும். முதலுதவி பற்றி தமிழ்மொழியில் நல்ல நூல்கள் பற்றுக்குறையாக இருக்கும் இக்கால கட்டத்தில் சாதாரண மக்களும் நன்கு அறிந்து கொள்ளும் விதத்தில் 75 விளக்கப்படங்களுடன் இந்த இரு நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன'.

இவ்வாறு சாரணர் இயக்க காங்கேசன்துறை மாவட்ட ஆணையாளர் திரு. நாகேந்திரம் போஜன் எழுதிய 'சமூக முதலுதவி', 'குடும்ப முதலுதவி' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்திய சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி குறிப்பிட்டார்.

அண்மையில் மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழாவுக்கு திரு. ந. சௌந்தரராஜன் தலைமை தாங்கினர். (72)

# குரக்கன் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

(அச்சுவேலி]

குரக்கன் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் கொண்டுள்ளனர். கடந்த காலங்களில் இல்லாத அளவிற்கு இந்த வருடம் விவசாயிகள் குரக்கன் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்

அச்சுவேலி, புத்தூர், இடைக்காடு, உரும்பராய், புன்னாலைக்கட்டுவன், ஆவரங்கால் ஆகிய பகுதிகளில் பெருமளவில் குரக்கன் செய்கை ஆரம்பமாகியுள்ளது.

பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படாமல் இருந்துவந்த தோட்டநிலம் எல்லாம் குரக்கன் செய்கைக்கு உள்ளாக்கப்பட்டுவருகின்றன.

## இன்று

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் கிழக்கு அ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல வெய்வல்லுநர் போட்டி இன்று 8-ம் திகதி திங்கட்கிழமை மாலை பாடசாலை அதிபர் திரு. சு. குலவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சுழிபுரம் கொத்தணி அதிபர் திரு. செ. பத்மநாதன் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். (72)

0 0 0

(உடுவில்)

மருதனார்மடம் கோட்டப் பாடசாலைகளின் 17, 19 வயதுக்குட்பட்ட மாணவர்களின் மெய்வல்லுநர் போட்டிகள் இன்று 8-ம்திகதி கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறும்.

கல்வியதிகாரி திரு. எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் மருதனார்மடம் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. தனஞ்சயன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (109)

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

கெயர், யு. எஸ். எயிட் விவசாய திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை, பசளைப் பாவனைமுறை ஆகியனபற்றிய விவசாயிகளுக்கான கருத்தரங்கு ஒன்று பண்டத்தரிப்பு வை.எம் சி.ஏ. மண்டபத்தில் கடந்தவாரம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. கா. குணரத்தினம், கெயர் நிறுவன யாழ். மாவட்ட பிரதிநிதி திரு. பத்திநாதர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்கள். (72)

0 0 0

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வித் திணைக்களமும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து அதிபர் தரம் I, II, III க்கான பயிற்சிக் கருத்தரங்குகளை கிளிநொச்சி சென்திரேசாள் பாடசாலையில் ஐந்து தினங்கள் நடத்தியது.

இதற்கான ஏற்பாடுகளை தமிழராசிரியர் சங்க சார்பில் கிளிநொச்சி செயலாளர் கனக மகேந்திரா செய்திருந்தார். (83)

## பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் அனுசரணையுடன் தொழில் பயிலுனர் சபையால் நடாத்தப்படும் கட்டிட நிர்மாண மேற்பார்வையாளர் பயிற்சிநெறி யாழ். தொழில்நுட்ப கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சியின்போது நாள் ஒன்றுக்கு ரூபா 20 ம், தொழில் நிலையப் பயிற்சியின் போது ரூபா 15 உம் வழங்கப்படும்.

பயிற்சியாளர்கள் இம்மாதம் 10-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

## பரீட்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் மாணவர்களை க. பொ. த. உயர்தர வகுப்பில் அனுமதிப்பதற்கான பரீட்சைகள் நடைபெற்று வருகின்றது. கல்வித்திணைக்கள ஏற்பாட்டிலே இப்பரீட்சைகள் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது, (83)

## அறிமுக விமர்சன விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் 'சாளரம்' என்னும் கல்வி அறிவியல் சஞ்சிகையின் அறிமுக விமர்சன விழா ஆசிரியர் கருணாநிதி தலைமையில் இடம்பெற்றது.

மத்திய கல்லூரி கலை அரங்கில் இடம்பெற்ற இவ்விழாவில் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி எழுத்தாளர் விந்தன், கவிஞர் அன்ரன். திரு. ந. நடனவடிவேல், மாணவர் தலைவர்சிறிநாகேஸ்வரன் ஆகியோர் விமர்சன அறிமுக உரையாற்றினர்கள். (83)

## பரிசளிப்புவிழா

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் புனித பற்றிமா பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்புவிழாவும் பாடசாலை அதிபர் சங், சகோதரி மரியகொன்ருட் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பிரதம கல்வி அதிகாரி எஸ். கமலநாதனும் சிறப்பு விருந்தினராக உருத்திரபுரம்கொத்தணி அதிபர் ம. பத்மநாதனும் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் ம. மகாதேவா, கவிஞர் ப. வை. ஜெயபாலன் ஆகியோர் உரையாற்றினர்கள். (83)

## தரை மார்க்கமாக நோயாளிகள் செல்ல ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலிருந்து சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டுசெல்ல வேண்டிய நோயாளிகளை தரைமார்க்கமாக கொழும்புக்கு கொண்டு செல்வதற்கு செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை காலமும் கப்பல் மூலம் 50க்கும் குறைவான நோயானர்கள்கொண்டு செல்லப்பட்டனர், கப்பல்களும் உரிய காலத்துக்கு வந்து சேராதபடியாலும் நோயாளர்கள் அவதியுறுவதாலும் செஞ்சிலுவைச் சங்கம் இந்த நடவடிக்கையை எடுப்பதாக தெரியவருகிறது. (153)

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இவ்வாண்டு சனிஷ்ட தொழில்நுட்பப் பாடநெறிக்களில் விவசாயம் வர்த்தகம், மனையியல் பாடத்துறைகளைச் சேராத ஏனைய பாடநெறியாசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இம்மாதம் 16ம் திகதி யாழ் சனகரத்தினம் ம. ம. வி யில் நடைபெறவுள்ளது.

## பழைய துணியுடன் நோயாளர் செல்ல வேண்டுமாம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் காயங்களுக்கு மருந்து கட்டச் செல்லும் நோயாளர்கள் தம்முடன் பழைய சீலைத் துணியையும் கொண்டு செல்ல வேண்டியுள்ளது

இவ் வைத்தியசாலையில் காயங்களுக்கு மருந்து கட்ட பயன்படுத்தப்படும் பண்டேஜ் மற்றும் துணிவகைகள் முற்றாக முடிவடைந்து விட்டதே இதற்கு காரணமாகும். யாழ். சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக்களஞ்சியத்திலும் இவைகையிருப்பில் இல்லாதபடியால் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப் படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. (72]

## மூன்று வார நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள 75 மாணவர்களுக்கு மூன்று கிழமைகளுக்குரிய நிவாரணப் பொருட்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் கையளிக்கப்பட்டது. [152)

## மூலிகை தோட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பஸ் டிப்போ சந்தியில் மூலிகைத் தோட்டம் ஒன்றை நிறுவ சைவ அபிவிருத்திக்கழகம் நடவடிக்கை எடுத்துவருவதாக கழக நிர்வாகி திரு. தேவநாயகம் தெரிவித்தார் இதேவேளை கிளிநொச்சி விவசாய பீடத்திலும் ஒரு மூலிகைத் தோட்டம் நிறுவப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [83]


## 91-ம் நாள் 'நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 10 ★ 03 ★ 1964



மறைவு: 11 ★ 04 ★ 1991

### கிருஷ்ணபிள்ளை கைலாசவாசன்

(கைலாஸ், அற்புதன்)

எம் உயிரினும் மேலான செல்வமே!
உமது ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்

உமது பாசமுள்ள:
தாய், சகோதரர்மார், சகோதரிமார்,
பேர்த்தி, உறவினர்கள், நண்பர்கள்.

அல்வாய் மேற்கு,
திக்கம்.

குறிப்பு: அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [08-07-1991] திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(எ 1425)



## இடமாற்ற அறிவித்தல்

### இலங்கை மின்சார சபை
### கிளிநொச்சி பிரதேச அலுவலகம்

கடந்த ஆனி மாதம் வரை பரந்தன் பூநகரி வீதியில் இயங்கிவந்த இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி பிரதேச அலுவலகம் தவிர்க்கமுடியாத காரணங்களால் தற்காலிகமாக கிளிநொச்சி மின்சார பாவனையாளர் சேவை நிலைய [இ. மி. ச. கிளிநொச்சி டிப்போ] வளவில் அமைந்திருக்கும் விடுதியில் இம்மாதம் தொடக்கம் இயங்கிவருகின்றது என்பதை மின் பாவனையாளருக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்;

**கிளிநொச்சி பிரதேச அலுவலகம்**
இலங்கை மின்சார சபை
கண்டி வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

மின்பொறியியலாளர்
கிளிநொச்சி பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
கிளிநொச்சி.

(எ 1429)

## "கல்வி அமைச்சில்

# தமிழ் மொழி அமுலாக்கல் இடம்பெறவேண்டும்"

### அமைச்சர் லலித் பணிப்பு

[கொழும்பு]

சல்வி அமைச்சின் சகல அறிக்கைகளுக்கும் தமிழ் மொழிபெயர்ப்பு இடம்பெற வேண்டுமென உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தமது அமைச்சின் உயரதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தமிழ் மொழி அரசகரும மொழியாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதனைச் சரிவர அமுல்நடத்தாத உத்தியோகத்தர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தமது பணிப்பாளரிடம் எச்சரித்துள்ளார்.

## யாழ். ஆஸ்பத்திரி மாடிக் கட்டட

# நிதியைப்'பெற்றுத்தருமாறு பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்திய சாலையில் நிர்மாணவேலையில் இடைநடுவில் விடப்பட்ட 5 மாடிக் கட்டிட தொகுப்பில் 2 மாடிக்கட்டிடத்தையேனும் பூரணமாகபூர்த்திசெய்வதற்கு 1 கோடி 20 லட்சம் ரூபா நிதி தேவைப்படுகிறது.

மேற்படி நிதியை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிடமிருந்து பெற்றுத் தருமாறு யாழ். போதனு வைத்தியசாலைப் பணிப்பாளர் அரசஅதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1982ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தகட்டிடத் தொகுதி இன்னும் பூர்த்திசெய்யப்படவில்லையென்பதுகுறிப்பிடத்தக்கது. [153]

## இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா அகதிமுகாம் இம்மாதம் 12ம் திகதி இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

வவனியா நகரிலிருந்து 4 மைல் தொலைவிலுள்ள எல்லப்பர்மருதங்குளத்திற்கு இம்முகாம் இடமாற்றம் செய்யப்படும்.

★

(பண்டத்தரிப்பு)

சங்கானை ஸ்தான அமெரிக்க மிஷன் த. க பாடசாலையிலும் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும் நீண்டகாலமாக தங்கியிருந்த அகதிகள் குடும்பங்கள் சண்டிலிப்பாயில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிறுவிக் கொடுத்துள்ள தற்காலிக வசிப்பிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (72)

# வடபகுதி புகையிரத நிலைய ஊழியர்கள் இடமாற்றம்

(புலோலி)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த புகையிரத நிலையங்களின் ஊழியர்கள் பலர் இம்மாதம் 16ஆம் திகதி முதல் வடமத்திய. கிழக்கு மாகாணங்களிலுள்ள புகையிரதநிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை தொடக்கம் கிளிநொச்சி வரையிலான புகையிரத நிலையங்களில் கடமையாற்றும் புகையிரதநிலைய ஊழியர்கள், குறிப்பாக சிற்றூழியர்கள் வடமத்தியமாகாணத்திலுள்ள அனுராதபுரம், மதவாச்சி மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்தி கல்லோயா, திருகோணமலை ஆகிய புகையிரத நிலையங்களுக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளனர். இதேபோல அனுராதபுரம், தலைமன்னர் புகையிரதப்பாதையில் செட்டிகுளம் தொடக்கம் தலைமன்னர் ஈருகவுள்ள புகையிரத நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களும் இடமாற்றத்திற்குள்ளாக்கப்பட்டதாக தெரியவருகிறது.

வடபகுதிப் புகையிரத நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் மட்டத்திலான பதவியிலுள்ள அநேகமானேர் ஏற்கனவே சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறியுள்ளதாகவும் தெரியவருகிறது. (61)

## கசிப்பு சிக்கியது

(யாழ்ப்பாணம்)

தாவடி சிவசக்தி சனசமூக நிலையத்தின் சுற்றுடலிலுள்ள வீட்டில் ரகசிய தகவலின் பேரில் திடீர் தேடுதலின்போது அவர்களின் வீட்டில் மறைத்து வைத்திருந்த 8 லீற்றர் கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

கசிப்பு விற்ற பெண்மணி தமிழீழ மகளிர் முன்னணியினரிடம் தாவடி பிரதேசக் குழுவினுல் ஒப்படைக்கப்பட்டார்.

அதே இடத்திலுள்ள மற்றொரு வீட்டிலும்கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும், 2 பரல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## லண்டனில் கிரிக்கெட் ஆட்டத்தில்

# யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சாதனை!

(லண்டன்)

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் கிரிக்கெட் கோஷ்டி, லண்டனில் இலங்கை கல்லூரிகளின் பழைய மாணவர் கோஷ்டிகளிடையே நடைபெற்ற கிரிக்கெட்போட்டியில் கொழும்பு ரேயல் கல்லூரி பழையமாணவர் கோஷ்டியை தோற்கடித்து சாம்பியன் கிண்ணத்தைப்பெற்றது.

இலங்கையின் 12 கல்லூரிகளின் பழைய மாணவர் கோஷ்டிகள் கலந்து கொண்ட மேற்படி மோதலின் இறுதியாட்டம், லண்டனிலுள்ள "வோஸ்ற்றர் பாக்" மைதானத்தில், பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை ரசிகர்கள் முன்னிலையில் கடந்த வாரம் நடைபெற்றது. 7 வீரர் பங்குபற்றும் நொக்கவுட் போட்டி இது.

கொழும்பு ரேயல் கல்லூரி, 5 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 51 ஓட்டங்களை மட்டுமே பெற்றது யாழ். மத்திய கல்லூரி வீரர்களான மனே, தர்மராஜ், தோமஸ் ஆகிய மூவரும் சிறப்பாக பந்து வீசினர்.

மேற்படி சாம்பியன் மோதலுக்கு முன்னர், யாழ். மத்திய கல்லூரி கொழும்பு சென், தோமஸ், நாலந்தா, கண்டி சென். அன்ரனிஸ் கல்லூரி கோஷ்டிகளையும் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

"இந்த வெற்றிக்கிண்ணத்தை. நாம் 2வது தடவையாக அடுத்தடுத்து பெற்றுள்ளோம்." என மத்திய கல்லூரி கோஷ்டியின் கணேசன் அனுத்திரன் தெரிவித்தார். (வி)

## கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை

# மெய்வல்லுநர் போட்டி

(உடுவில்)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மெய்வல்லுநர் போட்டியில், 200 மீற்றர் ஓட்டத்தை 25.91 செக்கனில் ஓடி சிறந்த சாதனை வீரனுக்குரியபரிசை ஆ. மரியதாசனும் உயரம்பாய்தல் போட்டியில் 4 அடி 1 அங்குலம் பாய்ந்து சாதனை வீராங்கனைக்கான பரிசை செல்வி ம. உமாகௌரியும் பெற்றுக் கொண்டனர்.

மேற்படி ஆசிரிய பயிற்சி கலாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு உடற்பயிற்சி விரிவுரையாளர் திரு. கே. யதுகுலசிங்கம் தலைமை வகித்தார்.

திரு. சி. வ. செல்வநாயகம். செல்வி மு. பத்மாவதி ஆகியோர் போட்டிகளை ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

விளையாட்டு போட்டிகளிற் பிரதம விருந்தினராக மேற்படி கலாசாலை அதிபர் திரு. வை, கா. சிவப்பிரகாசம் பிள்ளையும்முன்னைநாள் அதிபர்களான செல்வி வ. சின்னப்பு திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி உபஅதிபர் திருமதி க. செல்லத்துரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

போட்டிகளின் முடிவில், சிறந்த வீரனுக திரு. அ. மரியதாசனும், வீராங்கனையாக செல்வி ரி. ஜீவமணியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

காவேரி இல்லம் 159 புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தையும், சுவர்ணு, அருணு இல்லங்கள் முறையே 139,138 புள்ளிகளை பெற்று இரண்டாம், மூன்ரும் இடங்களையு பெற்றுக்கொண்டன. (109)

## இராசி பலன்

08- 07- 1991
திங்கட்கிழமை

ஏகாதசி மு.ப. 10-52வரை. கார்த்திகை மு. இ. 9-56 வரை.

மரணயோகம்.

இராகுகாலம் காலை 7- 08 முதல் 8-08 வரை.

சுபநேரம் காலை 11-58முதல் பகல் 1-28 வரை.

ஏகாதசி விரதம்.

மேடம்: விரோதிகள் நட்பு, கருத்துமோதல், குடும்பப் பிரிவு.

இடபம்; முகவசீகரம், மகிழ்ச்சி பிரவாகம், தொழில் லாபம்.

மிதுனம்: கடும்சினம், வருவாய் பாதிப்பு, தனிமையடைதல்.

கடகம்: தொழில் சிறப்பு, பயணங்கள் அனுகூலம், பணவரவு.

சிங்கம்: புத்திரர் பெருமை, சுபகாரிய நிகழ்வு, வெற்றி.

கன்னி: மனக்குளப்பம், தானதர்மம், குடும்பசச்சரவு.

துலாம்: அடிமை நிலை, தொழில்பாதிப்பு, அலைச்சல் மிகுதி.

விருச்சிகம்: ஞானிகள் பார்வை, தர்மசிந்தனை. மனநிறைவு.

தனுசு: எண்ணியது கைகூடும், கடுமையான உழைப்பு, பணவசதி.

மகரம்: மனச்சஞ்சலம், வாக்குதவறுதல், அதிகாரிகள் சினம்.

கும்பம்: மனவிகாரம், பணியாள் தொல்லை, காரியதடை,

மீனம்: தொழில் சிறப்பு, கற்பனை வளம், குடும்ப மகிழ்ச்சி.

- ஜோஸ்யர்

## அச்சுவேலி

# ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

(அச்சுவேலி)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு மீண்டும் அம்புலன்ஸ் வசதி வழங்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் இருந்து சேவையாற்றி வந்த அம்புலன்ஸ் அவசர தேவையை முன்னிட்டு மந்திகை வைத்தியசாலைக்குக் கடந்த வருடம் மாற்றப்பட்டிருந்தது.

இம்மாதம் 1-ஆம் திகதி தொடக்கம் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு மீண்டும் அம்புலன்ஸ் வசதி வழங்கப்பட்டு அங்கிருந்து சேவை செய்ய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# தெலுங்கு எம்.பி. கைது

(புதுடில்லி)

இந்திய ராஜசபாவில் தெலுங்கு தேசக்கட்சியின் உறுப்பினரான என். துன்சிரெட்டி ஆந்திர பிரதேசத்தில் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

ஆந்திரப்பிரதேச கடப்பார் லோக்சபா தொகுதியில் போட்டியிட்ட வெங்கட சுப்பையா கொலை செய்யப்பட்டது தொடர்பாக இவர்கைது செய்யப்பட்டார். இவர் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (மா)

## "விவசாயத்தை ஒரு பாடமாக்கி

# மாதிரித் தோட்டங்களை

## பாடசாலைகளில் அமைக்கவேண்டும்"

### — யாழ். கல்விப் பணிப்பாளர்

(உடுவில்)

"ஆசிரியர்கள் தமது பிரச்னைகளை அதிபருடனும், அதிபர்கள் தமது சிக்கலான பிரச்னைகளைக் கொத்தணி அதிபர்களுடனும், கொத்தணி அதிபர்கள் கோட்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடித் தீர்த்துகொள்ளவேண்டும். இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர்திரு.ஆர் சுந்தரலிங்கம்அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். மேலும்அறிவித்திருப்பதாவது:

மேன்முறையீட்டுக்கு விழையும் எவரும் வாரத்தில் புதன் கிழமைகளில் பிற்பகல் ஒன்றரை மணிக்குப் பின்னரே கல்விப் பணிப்பாளரைச் சந்திக்கலாம். இவ்விதியை மீறி வேறு தினங்களில் அலுவலகங்களுக்கு வருகின்ற எவருக்கும் அன்றையதினம் சம்பளமற்ற லீவாகக் கணிக்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவும் இக்கட்டான சூழ்நிலையிலும் மாணவர்களின் கல்வி எந்தவிதத்திலும் சீரழிந்துவிடாது பாதுகாக்க வேண்டியது ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாகிகள் ஆகியோரைச் சார்ந்ததாகும்.

அதிபர்கள், ஆசிரியர்கள் கற்பித்தல் நேரத்தில் கடமை தவருதிருப்பதோடு, காரணமின்றி வெளியில் செல்ல அனுமதிக்கக்கூடாறு. தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று ஆசிரியர்கள் கற்பித்தலும் தடைசெய்யப்படுதல் வேண்டும்.

பாடசாலை நேரத்தில் ஒழுக்கம் தவறும் எந்தவொரு அதிபர், ஆசிரியர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலை மேற்பார்வை முறையாகவும் திடீர் விஜயங்கள் மூலமும் கோட்ட, கொத்தணி மட்டங்களில் மேற்கொள்ளப்படும்.

பாடசாலைச் சொத்துக்கள் அழியாமல் பாதுகாப்பதில் அதிபர்கள், ஆசிரியர்கள் கூடிய கவனம் எடுத்தல் வேண்டும். இன்றைய நிலைக்கேற்ப விவசாயத்தை ஒரு பாடமாகச் சகல மாணவருக்கும் அறிமுகப்படுத்தி மாதிரித் தோட்டங்களை பாடசாலைகளில் அமைக்கவேண்டும்.

[4-ம் பக்கம் பார்க்க]

## சுயதொழில் வேலை வாய்ப்புக்கு

# உபகரணங்கள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு சுயவேலைவாய்ப்புகளை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் செஞ்சிலுவைச்சங்கத்தினர் தையல் வேலை, பன்னவேலை, தச்சுவேலை ஆகிய தொழில்களுக்கான உபகரணங்களை இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சங்கானைப் பகுதியிலுள்ள அகதிகள் முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு இந்த உபகரணங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [72]

## வன்முறை நடவடிக்கைகளினால்

# 16,94,406 பேர் இடம்பெயர்வு

# 415 முகாம்களில் தஞ்சம்!

## புனர்வாழ்வு அமைச்சு தகவல்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற வன்செயல்களினால் 4,53,846 குடும்பங்களைச் சேர்ந்த 16,94,406 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகப் புனர்வாழ்வு அமைச்சின் புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இடம் பெயர்ந்தவர்களில் 85,058குடும்பங்களைச் சேர்ந்த 2,13,458 பேர் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்த அகதிகளுக்காக 15 மாவட்டங்களில் 415 அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது. (ரி)

## 61 ஏவுகணைகள் அழிபபு

(பகதாத்)

ஈராக்கில் ஸ்கட் உட்பட 61 ஏவுகணைகள் அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. மேற்பார்வையின் கீழ் இந்த ஏவுகணைகள் அழிக்கப்பட்டன.

### விவசாயத்தை

[3-ம் பக்கத் தொடர்ச்சி)

அ தியாவசிய பாடசாலை செயற்பாடுகள் பற்றிய தமது விளக்கத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(109)

### மன்னார்தீவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இராணுவ, பொலிஸ் மினி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம் மினி முகாம்களில் பொலிஸ், இராணுவக்காவல் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை இப்பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சகல படிவங்களையும்

# மும்மொழிகளில் தயாரிக்க அமைச்சு உத்தரவு

(கொழும்பு)

சகல அரசாங்க உள்ளுராட்சி அலுவலகங்களிலும் கையாளப்படும் படிவங்கள் யாவும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒரே தாளில் அச்சிடப்பட வேண்டுமென்று பொதுநிர்வாக உள்நாட்டு அலுவலகள் அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், திணைக்கள உள்ளுராட்சி சபைத் தலைவர்களுக்கும் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## காரைநகரில் உள்ளோர் அனுபவிக்கும் அவதி

[யாழ்ப்பாணம்]

காரைநகரில் தற்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள் உணவுக் கஷ்டத்தினாலும், மருத்து வசதி இல்லாமையாலும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இவர்கள் உணவுப் பொருள்கள், உடுதுணிகள், பணம் என்பவற்றைக் கேட்டு காரைநகருக்கு வெளியே உள்ள தமது உறவினர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

அங்கு சேமித்துவைக்கப்பட்டுள்ள நெல், உழுந்து, பயறு, குரக்கன் போன்றவற்றை உணவாக எடுக்கமுடியாத நிலையில் உள்ளதாகவும், ஒருவருக்கு ஒருவர் தொடர்பை ஏற்படுத்தச் சிறிலங்காப் படையினர் அனுமதிப்பதில்லையெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட இடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு இவர்கள் செல்வதற்கும் அனுமதி மறுக்கப்படுகிறதாம்.

வயோதிபர் பலர் மருத்துவ வசதியின்றிப் பெரிதும் அவதிப்படுகின்றனர். நெஞ்சுவலி, தொய்வு, நீரிழிவு மற்றும் பலதரப்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு, நலிவடைந்த நிலையில் இவர்கள் உள்ளதாகவும் உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களில் தெரிவித்துள்ளனர்.

படையினர் அநேகமான மக்களிடமிருந்து பொருட்களையும், நகைகளையும் கொள்ளையடித்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர். [56]

## பண்ருட்டி தாக்குதலை கண்டித்து

# 10பஸ்கள் தீமூட்டி எரிப்பு

## ராமதாஸ் உண்ணாவிரதம்

[சென்னை]

பண்ருட்டி இராமச்சந்திரன் சட்டப்பேரவையில் தாக்கப்பட்டதைக் கண்டித்து பட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வரும் அதேவேளையில் தமிழகத்தில் பத்து பஸ்கள் தீமூட்டி எரிக்கப்பட்டதுடன் நூறுபஸ்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விடுத்த வேண்டுகோளை டாக்டர் ராமதாஸ் மறுத்துள்ளார்

இதேவேளையில் உண்ணாவிரதமிருந்த பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் உண்ணாவிரதத்திலிருந்து பொலிசாரால் அப்புறப்படுத்தப்பட்டு நேற்றுமாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்லெச்சு மற்றும் சம்பவங்கள் நடைபெற்று வருவதாகவும், தீவைப்பு சம்பவம் தொடர்பாக சுமார் 350 பேர் பொலிசாரால் நேற்று கைது செய்யப்பட்டுமுள்ளனர்.

இதேவேளையில் இந்தப் பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

### ஸ்ரீபெரம்புத்தூர் புனித ஸ்தலம்

[சென்னை

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட இடமான ஸ்ரீபெரம்புத்தூர், விரைவில் புனித ஸ்தலமாகப் பிரகடனம் செய்யப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [க]

### காரைநகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவிலிருந்து நேற்றுக்காலை ஏழு மணி முதல் சுற்றுடல் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது. [56]

### தவில் மேதை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புகழ்பெற்ற தமிழக நாதஸ்வர வித்வான்கள் காரைக்குறிச்சி அருணாசலம், ஷேக்சின்ன மௌலானா, வலயப்பட்டி சுப்பிரமணியம்,வலங்கைமான் ஆகியோருடன் இணைந்து தவில் வாசித்த பெருமை இவருக்கு உண்டு. (எஸ்-56)

### ஓய்வூதியர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கடிதங்களைச் சமர்ப்பிக்க முடியாவிட்டால், தற்காலிகமாக ஒய்வூதியங்கள் பெற்ற மாதங்களைக் குறிப்பிட்டுச் சத்தியக்கடதாசிகளைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (153)

## மரண அறிவித்தல்

### தவில் மாமேதை என். ஆர். சின்னராசா

யாழ்ப்பாணம் இணுவில் தெற்கைச் சேர்ந்த இலங்கை, இந்திய, சிங்கப்பூர், மலேஷிய புகழ் தவில் மேதை என். ஆர். சின்னராசா நேற்றுமுன்தினமிரவு மாரடைப்பால் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். (சி 4960)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180385/81

## ராஜீவ் கொலை விவகாரம்:

# சந்தேகநபர்கள்

## தப்பிச் செல்ல முயற்சி?

[புதுடில்லி]

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த ஒற்றைக் கண் நபர் சிவராஜனும், சுபாவும் நேபாளத்திற்குத் தப்பிச் சென்று, அங்கிருந்து தென்கிழக்காசிய நாடு ஒன்றுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளதாகப் புதுடில்லியில் கைதுசெய்யப்பட்ட சபாபதி என்னும் வயோதிபர் தகவல் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

புதுடில்லியில் இந்த வயோதிபருடன், 17 வயது நிரம்பிய திறை என்னும் இளம் பெண்ணும் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. [மா]

## கிழக்கில் 21 பொதுமக்கள்

# கொலை

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த புதூர் என்னும் கிராமத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை நடைபெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் 21 பொதுமக்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். 8பேர்படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

40 முதல் 50பேர் கொண்ட இனந்தெரியாத குழுவினர் கத்தி, வாள், துப்பாக்கி மற்றும் கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் நித்திரை செய்து கொண்டிருந்த அதிகாலை வேளையில் இத்தாக்குதல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (க)

## இளவசரர் சாள்ஸ்-டயானா இல்வாழ்வில் முறிவு?

(லண்டன்)

பிரிட்டிஷ்இளவரசர் சாள்ஸ் டயானா தம்பதிகளின் இல்லறவாழ்வு முற்றுப்பெற்றுவிட்டதாக லண்டன் டெய்லிமெயில் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இளவரசர் சாள்ஸ் பங்கு பறறுமல் டயானா தனது முப்பதாவது பிறந்த தினத்தைக் கொண்டாட முடிவு எடுத்திருப்பதையொட்டி இச்செய்திப் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. 42 வயதான சாள்ஸ் டயானாவை விட12 வயது மூத்தவர். (எஸ்)

# அகதிகள்

## அஞ்சத் தேவையில்லை

## - ரணில்

[கொழும்பு]

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து மேற்கு பகுதி நோக்கி வரும் அகதிகள் அச்சமடையத் தேவையில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் திரு ரணில் விக்கிரமசிங்கா அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெர்விக்கையில்; மேற்கு நோக்கி வரும் அகதிகள் இரு வாரங்களுக்குள் தம்மைப் பற்றிய முழு விபரங்களையும் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யவேண்டும். இந்நடவடிக்கையையிட்டு உண்மை அகதிகள் பயப்படவேண்டியதில்லை எனத் தெரிவித்துள்ளார். [க]

## இந்தியாவுக்கு நேபாளம் ஆதரவு வழங்கும்

[காட்மண்டு]

இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு எதிராக இந்தியா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு நேபாள அரசு தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

நேபாள அரசின் அதிகாரபூர்வமான ஆங்கில செய்திப் பத்திரிகையான 'ரைபினில்' இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேபாள அரசின் இந்நடவடிக்கை மூலம் தீவிரவாத நடவடிக்கைகளை அனுமதிப்பதில்லை என்ற இந்திய அரசின் முடிவுடன் தாமும் ஒத்துப் போவதாகத் தெரிவித்துள்ளது. (க)

### மாணவருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டது.

அறவழி போராட்டக்குழு, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகியவற்றால் கொடுக்கப்பட்ட 200 பொருட்களோடு 50,000 ரூபா பெறுமதியான காசோலையும் அண்மையில் வழங்கப்பட்டது. (152)

### அகதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சியால் வற்றிபோய் விடுகிறது.

இதனால் இங்குள்ள அகதிகளுக்கு குடிதண்ணீர் பிரச்னையும் ஏற்பட்டுள்ளது.

மடுக்கோவில் அகதிகள் முகாமில் 30 ஆயிரம் அகதிகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (153)

## தொற்று நோய் பரவும் அபாயம்

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெய்யில் காரணமாக கண் நோய், காய்ச்சல், சின்னமுத்து, கொப்பளிப்பான், நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்றுநோய்கள் பரவிவருகிறது.

சிலருக்கு இக்கொடூர வெப்பத்தால் கண்ணில் கட்டியும், நீர்வடிவதையும் காணக்கூடியதாகவுள்ளது. [154]